
பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை 19.10.2025 கதிர் 343



## இது ரகசியம் அல்ல!


மருத்துவர் அருச்சுனா நாடாளுமன்ற உறுப்பினரானதற்குப் பின்னணியில் சாவகச்சேரி அரச மருத்துவமனையை மையமாக வைத்து அவர் ☞2

# தமிழ் அரசியல்வாதிகளின் தன்னகம்பாவம் நீங்கும்வரை தேசிய அரசியலே கிடையாது

## உளநல வைத்திய நிபுணர் சிவதாஸ் கருத்து

தமிழ் அரசியல்வாதிகளின் தன்னகம்பாவம் நீங்கும் வரை தமிழ்த்தேசியஅரசியல்என்பதற்கு எதிர்காலமே இல்லை என்று உளநலமருத்துவநிபுணர்சிவதாஸ் தெரிவித்தார்.

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதித் தொகுத்த 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' என்ற நூலின் யாழ்ப்பாண அறிமுக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே உளநல வைத்திய நிபுணர் சிவதாஸ் இதனைத் தெரிவித்தார்.




நூலின் வெளியீட்டு விழா கொழும்பில் இடம்பெற்றது. அதன் அறிமுக விழா நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில், சட்டத்தரணி தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம உரையாளர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உளநலவைத்தியநிபுணர்சிவதாஸ் மேலும் தெரிவித்ததாவது: ☞2

தமிழ் அரசியல்

# தமிழ்த் தேசியத் தரப்புக்கள் பிளவின்றி ஒற்றுமையோடு பயணிப்பது அவசியம்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கருத்து

அண்மைய காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகளால் சிங்கள அரசியல் கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலூன்றியதாகச் சுட்டிக்காட்டியுள்ளஜனநாயகத்தமிழ்த் தேசியக்கூட்டணியின்உறுப்பினரான புளொட்சித்தார்த்தன், எனவேஎதிர்வருங்காலங்களில் தமிழ்த் தரப்புக்கள் பிளவுகளின்றி ஒற்றுமையுடன் முன்நோக்கிப் பயணிக்கவேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளார். ☞3

## மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ்க் கட்சிகள்

# இணைந்து பயணிப்பது பற்றி கட்சி மட்டுமே தீர்மானிக்கும்

## தமிழ் அரசு செயலாளர் சுமந்திரன் திட்டவட்டம்

மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாகநடத்துவதற்குஆளும்தரப்புக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பது என்பது பற்றி ஆராயும் நோக்கில் தமிழ்த் தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்படும் சந்திப்புக்களில் பங்கேற்பதற்குத் தாம் தயாராகவே இருக்கிறார் எனவும், ஆனால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் ஒன்றிணைந்து பயணிப்பது ☞2

# தங்கத்தின் விலை நேற்று ரூ. 20 ஆயிரத்தால் வீழ்ச்சி

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக வெள்ளிக்கிழமை 4 இலட்சம் ரூபாவைத் தாண்டி 410,000 ரூபாவாகப் பதிவாகியிருந்த 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை, நேற்றைய தினம் 20,000 ரூபாவினால் வீழ்ச்சியடைந்து 390,000 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் தங்கத்தின் விலை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில், வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் வெள்ளிக்கிழமை 24 கரட் தங்கப்பவுண் ஒன்றில் விலை 15,000 ரூபாவினால் அதிகரித்து 410,000 ரூபாவாகப் பதிவாகியிருந்தது. அதேவேளை 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை வெள்ளியன்று 13,800 ரூபாவால் அதிகரித்து, 379,200 ரூபாவாகப் பதிவாகியிருந்தது.

வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்று தங்கத்தின் விலை சுமார் 20,000 ரூபாவினால் வீழ்ச்சியடைந்தது.

அதன்படிவெள்ளிக்கிழமை 379,200 ரூபாவாகப் பதிவான 22 கரட் தங்கப்பவுண் ஒன்றின் விலை நேற்றைய தினம் 360,800 ரூபாவாகவும், வெள்ளிக்கிழமை 410,000 ரூபாவாகப் பதிவான 24 கரட் தங்கப்பவுண் ஒன்றின் விலை நேற்று 390,000 ரூபாவாகவும் வீழ்ச்சியடைந்தது.

## இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் கீழ்

# போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. திரட்டியது ஒரு லட்சம் ஆவணங்கள்

ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தில் இயங்கிவரும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினால் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தமாக 112,348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றில் 7,459 ஆவணங்கள் திறந்த மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவை, 104,889 ஆவணங்கள் இரகசிய மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவை.

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப் பாதுகாப்பான டிஜிட்டல் ஆதாரத் திரட்சிக் கட்டமைப்பின் ஊடாகப் பேணப்படுவதாகவும், இவற்றில் மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருப்பதாகவும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் ☞2

# காணாமற்போனோருக்கான நினைவுகூரலில் பங்கேற்பது தொடர்பில் அநுரகுமார மௌனம்

## தெற்கில் உறவினர்கள் கொதிப்பு

தெற்கில் 1989 இல் ஜே.வி.பி எழுச்சியின் போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைநினைவுகூரும் வகையில் சீதுவ - ரத்தொலுவவில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு அண்மையில் வருடாந்தம் நடைபெறும் நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்குமாறு தாம் அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கு அழைப்புவிடுத்துள்ளபோதிலும்,அவரிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை என தெற்கில்காணாமல்போனோரின்உறவினர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

1989ஆம்ஆண்டளவிலேஜனதாவிமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) எழுச்சியின்போது அதன் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் மேலும்பலர்வலிந்துகாணாமலாக்கப்பட்டனர். இச்சம்பவங்களுக்கு மத்தியில் 1989ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக வலய ☞2

## இனி இது .....

மேற்கொண்ட வைத்தியர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் மிக முக்கியமான காரணம் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். தான் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அவர் நிரூபித்தாரா, அந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருந்ததா, அது குறித்து கேள்விகளுக்கு அவர் எப்போதாவது உருப்படியான பதிலை வழங்கியுள்ளாரா என்பதெல்லாம் அவருக்கு வாக்களித்த மக்களுக்கு முக்கியமான என்ன? அதனால் அது குறித்து யாரும் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் அவர் அடுத்த கட்டத் தேர்துக்குத் தயாராகக்கூடிய வகையில் மருத்துவர்கள் பற்றிய மற்றொரு விடயம் வெளிவந்திருக்கிறது. அது பற்றியதுதான் இந்தப் பதிவு.

'பல மருத்துவ அதிகாரிகள் அரசின் அனுமதியுடன் வெளிநாட்டுப் பயிற்சிக்காக பயணம் செய்தும், திட்டமிட்ட காலத்தை விட முன்னதாக நாடு திரும்பியோ அல்லது பயிற்சியில் கலந்துகொள்ளாமலேயே இருந்து கொண்டே, விமானச் செலவு, வாழ்வாதார கொடுப்பனவு மற்றும் பிற நிதி நன்மைகளை முழுமையாக பெற்றுமிருந்தனர்.

மேலும், வெளிநாட்டுப் பயிற்சிக்காக அனுப்பப்பட்ட மருத்துவர்கள் திரும்பி வந்து கடமையாற்றாத காரணத்தால், ஒருவர் பின்னர் செலுத்த வேண்டிய ரூ. 6 இலட்சம் மதிப்பிலான பிணைத் தொகைகளை சுகாதார அமைச்சு மீட்டெடுக்க முடியாமல் சிக்கிக் கொண்டுள்ளது' என்று அறிக்கை கூறுகிறது.

கணக்காய்வாளர் அலுவலகம் தேசிய வைத்தியசாலையின் ஒரு கதிர்வீச்சு நிபுணரைச் சார்ந்த 2009 முதல் 2023 வரையிலான 29 வெளிநாட்டுப் பயணங்களை ஆய்வு செய்தபோது, பல ஒழுங்கு மீறல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அந்த அதிகாரிக்கு 2018 மார்ச் 1 முதல் ஒகஸ்ட் 31 வரை சம்பளத்துடன் வெளிநாட்டு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அமெரிக்கா மற்றும் இந்தியாவில் தலா மூன்று மாதப் பயிற்சிக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தும், அவர் அந்தக் காலத்தில் பயிற்சியில் கலந்து கொள்ளவில்லை என்பது பதிவுகளிலிருந்து உறுதியாகியுள்ளது.

அவருக்காக ரூ. 289,400 விமானச் செலவாகவும், அமெரிக்காவில் தங்கியதற்காக ×5,781 (சுமார் ரூ. 18,49,920) கொடுப்பனவாகவும், மேலும் ஷ்75 (சுமார் ரூ. 30,525) குளிர் ஆடை கொடுப்பனவாகவும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் குடிவரவு மற்றும் குடியேற்றத் திணைக்கள பதிவுகள்படி, அவர் 2018 ஜூன் 30 அன்று வெளிநாடு சென்று ஜூலை 31 அன்று திரும்பியுள்ளார் – மொத்தம் 32 நாட்கள் மட்டுமே வெளிநாட்டில் இருந்துள்ளார். இதனால் அனுமதிக்கப்பட்ட விடுமுறைக்காலத்தை மீறி 22 நாட்கள் இலங்கையில் இருந்தபோதும் கடமைக்குத் திரும்பாது சம்பளம் பெற்றிருக்கிறார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் இந்தியாவில் மூன்று மாதப் பயிற்சிக்காக ரூ. 119,200 விமானச் செலவாகவும் ரூ. 8,12,900 வாழ்வாதார கொடுப்பனவாகவும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் வெறும் ஆறு நாட்கள் மட்டுமே இந்தியாவில் தங்கியிருந்தார் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன.

மேலும், அந்த அதிகாரி 2009 முதல் 2023 வரை மொத்தம் 29 முறை வெளிநாடு சென்றபோதும், 20 முறை முறையான அனுமதி பெறாமலேயே பயணம் செய்திருக்கிறார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்காக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை என்றும் அவர் பெற்ற சம்பளங்கள் திரும்பப் பெறப்படவில்லை என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மற்றொரு வழக்கில், 2021 பெப்ரவரி 4 முதல் 2023 பெப்ரவரி 3 வரை வெளிநாட்டு பயிற்சிக்காக இரண்டு ஆண்டுகள் சம்பளத்துடன் விடுமுறை வழங்கப்பட்ட மருத்துவ அதிகாரி, அதே ஆண்டின் ஜூலை 7 அன்று நாடு திரும்பியிருந்தும், அமைச்சுக்கு அதுகுறித்து அறிவிக்கப்படாததால் அவர் வேலைக்குச் செல்லாமலேயே ஜூலை 8 முதல் செப்டம்பர் 2 வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்றிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

அந்தக்காலத்துக்கான பயிற்சி கொடுப்பனவு பின்னர் திருப்பி செலுத்தப்பட்டிருந்தாலும், அந்தக் காலத்தில் அவர் வேலையின்றிப் பெற்ற சம்பளங்கள் மீட்கப்படவில்லை. ஆனால், இதனுடன் தொடர்பான குற்றச்சாட்டுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முன்மொழியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்னொரு மருத்துவர் 2020 பெப்ரவரி 11 அன்று இலங்கைக்குத் திரும்பியிருந்தும், அமைச்சு ஆவணங்களில் அவர் மார்ச் 30 அன்று திரும்பினார் எனக் கூறப்பட்டிருப்பது வேறுபாடாகக் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடைவெளியில் அவர் எங்கு கடமையாற்றினார் என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த அனைத்து நிகழ்வுகளையும் முழுமையாக ஆராய்ந்து, பொறுப்பானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

இதுபோதாதா நமது மருத்துவருக்கு அடுத்த தேர்தலைத் தாக்குப்பிடிக்க. இங்கிருந்து யார் யார் எல்லாம் வெளிநாடு போனார்கள் என்ற பட்டியலை எடுத்து வைத்து அவர்களுக்கு எதிராக யுரியூப்காரர்களுக்கு முன்பாக உளறினால் போதுமே வாக்குகள் தானாக வந்து கொட்டும். பிறகென்ன அடுத்த முதலமைச்சர் அவர்தானே!(?) எனக்கென்னவோ இந்தச் சதித் திட்டத்துடன்தான் கணக்காய்வாளர் நாயகம் இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பாரோ என்று தோன்றுகின்றது(!!!!???) .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## தமிழ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களிடம் காணப்படும் தன்னகம்பாவமே இன்றுவரை எமக்குத் தீர்வொன்று கிடைக்காததற்குக் காரணமாகும். அரசியல்வாதிகள் என்றில்லை, எங்கள் அனைவரிடமும் தன்னகம்பாவமே தலைதூக்கிக் காணப்படுகிறது.

பொதுவாக நாங்கள் எல்லோருமே கறுப்பு - வெள்ளை மனநிலையிலேயே இருக்கிறோம். கறுப்புக்கும், வெள்ளைக்கும் இடையில் 'கிறே' நிறமொன்று இருப்பதை யாருமே ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை. அதாவது விட்டுக்கொடுப்பு - இணங்கிப்போதல் மனநிலை என்பது யாரிடமும் அறவே இல்லை.

இன்றைய நிலையில் - போருக்குப் பின்னரான இந்தக் காலப்பகுதியில் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் வாழ்வதற்காக வாழவில்லை, வாழ்வாதாரத்துக்காகவே வாழுகிறோம் (லிவிங் போஃர் செவைவல் நொட் போஃர் லைஃவ்).

போருக்குப் பின்னரான அல்லது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான காலப்பகுதியில் எமது மக்களுக்கு மிக அவசியமானது குணமாக்கல் ஆகும். சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் குணப்படுத்தாமல் தேசியத்துக்கான எதிர்காலம் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

இங்கே அரசியல்வாதிகள் பலர் இருக்கிறார்கள். நான் யாரையும் குத்திக் காட்டுவதற்காக இதைச் சொல்லவில்லை.

தொடக்கத்தில் உளப்பாதிப்பு என்பது ஒரு நோய் நிலையாக இருந்தது. போர் முடிவடைந்ததும் அது இடைத்தங்கல், புனர்வாழ்வு முகாம்களை மையப்படுத்தி அதிகரித்தது, அதன் பின் போதைப் பாவனை, சிறைச்சாலைகளிலும், குடும்பங்களின் பிளவுகளிலும் சுழன்று கொண்டு நிற்கிறது. மக்கள் தேசியத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் குணமாக்கல் மேறகொள்ளப்பட வேண்டும்' என்றார்.

இந்த நூல் வெளியீட்டின் போது, பொறியியலாளர் சிவக்குமார், இலக்கியவாதி கருணாகரன் ஆகியோரும் உரையாற்றினர். தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வடக்கு மாகாணசபை அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சிவஞானம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் உட்பட அரசியல் பிரமுகர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையில் 2021ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' எனும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இச்செயற்திட்டத்தின் ஓரங்கமாக இலங்கையில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழான வழக்குத் தொடரல் தேவைப்பாடுகளுக்காக உரியவாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின்கீழ் இயங்கும் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் ஊடாக இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் 112,348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. இவற்றில் 78,151 ஆவணங்கள் இலங்கை தொடர்பான ஐ.நாவின் முன்னைய விசாரணை அறிக்கைகளில் இருந்தும், 34,197 ஆவணங்கள் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினாலும் திரட்டப்பட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் மீறல்கள் பற்றிய தகவல்கள், ஆதாரங்கள், சிவில் அமைப்புக்களின் அறிக்கைகள், நேர்காணல்கள், அறிக்கைகள், காணொளிகள், புகைப்படங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

அதேவேளை, செப்டெம்பர் மாதம் வரையில் திரட்டப்பட்டுள்ள 112,348 ஆவணங்களில் 7,459 ஆவணங்கள் திறந்த மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவையாகவும், 104,889 ஆவணங்கள் இரகசிய மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவையாகும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இரகசிய மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற 104,889 ஆவணங்களில் 0.5 சதவீதமானவை நேர்காணல்கள் மற்றும் சாட்சியங்களின் வாக்குமூலங்களும், 1.3 சதவீதமானவை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெற்ற தரவுகளும், 1.9 சதவீதமானவை நீதிமன்ற ஆவணங்களும், 23.2 சதவீதமானவை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெற்ற அறிக்கைகளும், 27.6 சதவீதமானவை மின்னஞ்சல், கடிதங்கள், கூட்ட அறிக்கைகள் உள்ளிட்டவையும், 45.5 சதவீதமானவை பாதிக்கப்பட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டவையும் ஆகும்.

அதேபோன்று ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறை வசமுள்ள ஆவணங்களில் 37,905 ஆவணங்கள் சட்டவிரோத படுகொலைகள் தொடர்பானவையும், 48,070 ஆவணங்கள் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பானவையும், 32,099 ஆவணங்கள் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறல்கள் தொடர்பானவையும், 9,163 ஆவணங்கள் சிறுவர்களுக்கு எதிரான மிகப் பாரதூரமான மீறல்கள் தொடர்பானவையும், 26,185 ஆவணங்கள் சித்திரவதைகள் தொடர்பானவையும் ஆகும்.

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப்பாதுகாப்பான டிஜிட்டல் ஆதாரத்திரட்சிக் கட்டமைப்பின் ஊடாகப் பேணப்படுவதாக இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம் தெரிவித்துள்ளது. அதுமாத்திரமன்றி இந்த ஆவணக்களஞ்சியம் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதாகவும், மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருப்பதாகவும் அச்செயற்திட்டம்

## காணாமற்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியரும், தொழிற்சங்கவாதியுமான ரஞ்சித் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகிய இருவர் கொல்லப்பட்டதன் பின்னர், அவர்களது உடல்கள் ரத்தொலுவ பகுதியில் கண்டறியப்பட்டன.

அதனையடுத்து அவர்களை நினைவுகூரும் வகையில் சீதுவ - ரத்தொலுவ சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி, பின்னாளில் தெற்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரை நினைவுகூருவதற்கான நினைவுத் தூபியாக மாற்றமடைந்தது.

அதன்படி தெற்கில் காணாமல் போனோரின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கிவரும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காணாமல்போனோரின் குடும்பங்களின் பங்கேற்புடன் வருடாந்தம் ஒக்டோபர் 27 இத்தூபிக்கு அண்மையில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெறும்.

அதற்கமைய இம்முறை நடைபெறவுள்ள நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்குமாறு தாம் அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார் எனவும், இருப்பினும் அதற்கு அரசுத் தலைவர் தரப்பில் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ, பின்னர் பாதிக்கப்பட்ட தரப்பினரைச் சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு கோரி கடிதம் அனுப்பினார் எனவும், அதற்கும் பதில் கிடைக்கவில்லை எனவும் விசனம் வெளியிட்டார்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்படல்களால் தாமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர் எனக்கூறும் அரசுத் தலைவர், இந்த நினைவுகூரல் நிகழ்வில் பங்கேற்பது குறித்து எந்தவொரு பதிலையும் வழங்காமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மிகுந்த கவலையடைந்திருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

## இணைந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துக் கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்பு எனில் அதில் பங்கேற்பது குறித்துக் கட்சியே தீர்மானிக்கும் எனவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

நீண்டகாலம் நடத்தப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் மாகாணசபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், ஜனநாயகப் போராளிக்ள் கட்சி, சமத்துவக் கட்சி என்பவற்றின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் பங்கேற்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருந்தபோதிலும் அக்கட்சியின் சார்பில் எவரும் சந்திப்பில் பங்கேற்றிருக்கவில்லை. அதனையடுத்து தனிப்பட்ட சில காரணங்களால் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனவும், இவ்விடயம் தொடர்பில் எதிர்வருங்காலங்களில் நடத்தப்படும் சந்திப்புக்களில் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகள் கலந்;துகொள்வர் என எதிர்பார்க்கிறார் எனவும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்திருந்தார்.

கூட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணம் குறித்து சுமந்திரனிடம் வினவியபோது, அக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்குத் தமக்கு அழைப்புவிடுக்கப்பட்டதாகவும், இருப்பினும் அன்றைய தினம் கொழும்பில் இருக்கவேண்டியிருந்த காரணத்தால் அதில் பங்கேற்க முடியவில்லை எனவும் பதிலளித்தார்.

இவ்விடயம் தொடர்பில் எதிர்வருங்காலங்களில் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்வீர்களா எனக் கேள்வி எழுப்பியபோது, அதற்கு சுமந்திரன் ஆம் எனப் பதிலளித்தார்.

'மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கு ஆளும்தரப்புக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பது, அதனை முன்னிறுத்தி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து நாம் தமிழ்த் தரப்புக்களுடன் மாத்திரமன்றி கொழும்பை மையமாகக்கொண்டு இயங்கும் அமைப்புக்கள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினருடனும் ஏற்கனவே கலந்துரையாடல்களை முன்னெடுத்துவருகிறோம். அதற்கமைய தமிழ்த் தரப்புக்களால் இந்த நோக்கத்துடன் ஒழுங்குசெய்யப்படும் கலந்துரையாடல்களில் பங்கேற்போம். இருப்பினும் அவை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் ஒன்றிணைந்து பயணிப்பது குறித்து கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்புக்களாக இருந்தால், அவற்றில் பங்கேற்பது தொடர்பில் கட்சியுடன் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானிக்கமுடியும்' என்றார் அவர்.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகாலம்நடத்தப்படாமல்இழுத்தடிப்புச் செய்யப்பட்டவரும்மாகாணசபைத்தேர்தல்கள் விரைவில் நடாத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று புதன்கிழமையாழ்ப்பாணத்தில்நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதுடன் அத்தேர்தலை இலக்காகக்கொண்டு தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும்எனவலியுறுத்தப்பட்டது.

அதனையடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் ஊடகச் சந்திப்பொன்றைநடத்தியதமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்,'ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி பதவிகளைக் கைப்பற்றுவதற்காக எமது உதவிகளைப் பெற்றுவிட்டு, அவ்வேளையில் செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் இப்போது அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பில் கூட்டங்களை நடத்துவது தாமாகவே ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகவே நாம் கருதுகின்றோம்' என அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின்போது புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு, தமிழ்த் தேசியப் பேரவை எனும் பொதுப் பெயரில்கஜேந்திரகுமார்தரப்புடன்நிறுவப்பட்ட கூட்டணியில் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவு குறித்து வினவியபோது சித்தார்த்தன் பதிலளித்தார்.

ஒரு கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளின் மத்தியில் அவ்வப்போது மாறுபட்ட கருத்துக்களும், நிலைப்பாடுகளும்நிலவும்எனச்சுட்டிக்காட்டிய அவர், இருப்பினும் அவற்றுக்கு அப்பால் தற்போதைய சூழ்நிலையில் சகல தமிழ்த் தேசிய தரப்புக்களும் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டியது மிகவும் அவசியம் என வலியுறுத்தினார்.

'அண்மைய காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ்த் தேசியத் தரப்புக்கள் மத்தியில்ஏற்பட்டபிளவுகளால்சிங்களஅரசியல் கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலூன்றின.அதுமாத்திரமன்றிதமிழ்த்தேசியக் கட்சிகள் மீதான அதிருப்தியின் விளைவாக தமிழ் மக்களும் மாற்றுத்தரப்புகளுக்கு வாக்களித்தனர். எனவே எதிர்வரும் தேர்தல்களில் வெளியகத் தரப்புகளுக்கு சாதக வாய்ப்பை வழங்கக்கூடிய இவ்வாறான பிளவுகளைத் தவிர்த்து, தமிழ்த் தேசியத் தரப்புக்கள் ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டியது அவசியமாகும்' என்றும் அவர் தெரிவித்தார்..

# இந்தியாவின் அயலவருக்கு முன்னுரிமை கொள்கையை பாராட்டிய பிரதமர் ஹரினி

இந்தியா சென்றிருந்த பிரதமர் ஹரினி வெள்ளிக்கிழமை என்டிரிவி ஏற்பாட்டில் நடந்த 'தெரியாத ஆபத்தின் விளிம்பு: தீர்வுகளும் புதுப்பித்தல்களும்' என்ற உலக உச்சி மாநாட்டில் சிறப்புரையாற்றினார்.

'நிச்சயமற்ற காலங்களில் மாற்றத்தை வழிநடத்துதல்' என்ற தலைப்பில் ஹரினி அங்கு உரையாற்றினார். அவர் தனது உரையில், உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் பிராந்திய ஒத்துழைப்பு, தகவமைப்பு மற்றும் பகிரப்பட்ட பொறுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவின்'அயல்நாடுகளுக்கு முன்னுரிமை' கொள்கையைப் பாராட்டிய அவர், இது பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கும் ஒரு கட்டமைப்பு என விவரித்தார்.

இலங்கையின்2022பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய உதவிக்கு ஹரினி நன்றி தெரிவித்தார், 'நமக்கு தேவைப்படும் நேரத்தில் இந்தியா வழங்கிய உதவி இலங்கை மக்களால் ஆழமாக மதிக்கப்படுகிறது' என்று கூறினார்.

இந்தியாவுடனான தனது தனிப்பட்ட தொடர்பைப் பற்றிப் பேசிய அவர், 1990களில் இந்தியாவில் ஒரு மாணவராக இருந்த நேரத்தை நினைவு கூர்ந்தார்.

இந்தியாவுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துதல், தற்போதுள்ள சுதந்திரவர்த்தகஒப்பந்தத்தைநவீனமயமாக்குதல், கடல்சார் இணைப்பை மேம்படுத்துதல்மற்றும்இலங்கையை இந்தியப் பெருங்கடலில் ஒரு மூலோபாய மையமாக நிலைநிறுத்துதல் போன்ற இலங்கையின் திட்டங்களை பிரதமர் தனது உரையில் கோடிட்டுக் காட்டினார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றம் வாக்குறுதியா, மாயையா?

ஒரு வருடத்திற்கு முன் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு புதிய பக்கம் திறக்கப்பட்டது. அநுரகுமார, மொத்த வாக்காளர்களில் 43 சதவீதத்தினரின் ஆதரவை மட்டுமே பெற்றிருந்தபோதிலும், நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெரும்பான்மைவாக்கில்லாமலே ஆட்சியைப் பெற்றது ஒரு புதிய அரசியல் நிகழ்வாகக் கருதப்பட்டது.

மக்களின் எண்ணம் எளியது – 'மாற்றம் வேண்டும்'. ஊழல், பொருளாதார வீழ்ச்சி, நிர்வாக அலட்சியம் ஆகியவற்றால் விரக்தியடைந்த மக்களுக்குள், அநுரவின் வாக்குறுதிகள் நம்பிக்கையின் ஒளியாகப் பதிவாகின.

### ஒளி வீசித் தேய்ந்த நட்சத்திரங்கள்

திஸாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (NPP) ஆட்சிக்கு வரும்போது, மக்களிடம் 8 முக்கிய வாக்குறுதிகளை அளித்தது.

1. நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் பதவி நீக்கம்
2. மின், எரிவாயு, எரிபொருள் போன்ற அத்தியாவசியங்களின் விலைக் குறைப்பு
3. ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளை வெளிக்கொணர்தல்
4. பன்னாட்டு நாணய நிதிய ஒப்பந்தத்தை மக்கள் நலனுக்கேற்ப மாற்றுதல்
5. ஊழல் மற்றும் வீண் செலவை ஒழித்தல்
6. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல்
7. புதிய அரசமைப்பை உருவாக்குதல்
8. அரசமைப்பின்படி மாகாண சபைகளை முழுமையாகச் செயற்படுத்துதல்

இவை அனைத்தும் தமிழ் பேசும் மக்களிடமும் சேர்த்து அனைத்து மக்களிடமும் நம்பிக்கையைப் பெருக்கியது. ஆனால் ஒரு வருடத்திற்குப் பிறகு, இவை எல்லாம் காற்றில் கலந்துவிட்டன. நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் பதவி நீக்கம் எனும் பெரும் வாக்குறுதியே அரசியல் உரையாடல்களில் இருந்து மறைந்துவிட்டது. அதேசமயம் வாழ்க்கைச் செலவு குறையும் என்ற வாக்குறுதியும் கனவாகவே உள்ளது.

முன்பு அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது மக்கள் நம்பிக்கைக்குத் துரோகம் எனக் கூறிய அதே தேசிய மக்கள் சக்திதான், இன்று அதை ஆதரிக்கிறது. இரத்தினபுரியில் அண்மையில் நடந்த கூட்டத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார, 'அரசு நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது அவசியம்' என்ற கூற்று, விமர்சகனை வாதையாளனாக மாற்றியதாக அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இது அரசியல் உண்மையின் கொடிய வெளிப்பாடு – வாக்குறுதிகள் அரசியல் கவிதை; நடைமுறை கற்பனைக்கு அப்பாற்பட்டது.

### உண்மையிலிருந்து திசைதிருப்பல்

செயல்களில் முன்னேற்றம் இல்லாதபோது, காட்சிகளே அரசியலின் காப்புக் கருவி ஆகிறது. சில அமைச்சர்களின் அடிப்படையில்லாத கூற்றுகள் இதற்குச் சான்று.

ஒரு துணை அமைச்சர், 'எங்கள் 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கதிர்காமர் அளவுக்குதிறமையுடையவர்கள்' எனக்கூறியிருப்பது, சிரிப்பையும் வருத்தத்தையும் ஒருசேர உண்டாக்கியது. மற்றொருவர், சமீபத்தில் நேபாளத்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அழைத்து வரப்பட்ட குற்றவாளியை 'அறிவுள்ள பெண்' எனக் கூறி, அவர் தேசிய முன்னேற்றத்துக்குத் துணைபுரியக்கூடியவர் எனப் புகழ்ந்தது – அரசியல் நகைச்சுவையாக மாறியது.

அதிலும் மோசமாக, சட்ட வல்லுநராகிய ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர், 'நீதிமன்ற உத்தரவை காவல்துறை செயல்படுத்த வேண்டாம்' என வெளிப்படையாகக் கூறியது நீதித்துறைக்கே அவமதிப்பு. நீதிமன்ற உத்தரவைப் புறக்கணிக்கச் சொல்லும் அதிகாரம் எந்த அரசியல்வாதிக்கும் இல்லை. இது சட்டத்தின் ஆட்சிக்கே எதிரான சவால். ஆளும்தரப்பு இத்தகைய கூற்றுகளுக்கு எதிராகச் செயல்படாவிட்டால், அதன் நெறி நிலைப்பாடு சந்தேகத்துக்குள்ளாகும்.

### அரசியல் நஞ்சு

காவல்துறை அரசியல் செல்வாக்கில் சிக்கியுள்ளதாக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. சமீபத்தில் ஒரு முன்னாள் காவல் ஆய்வாளர், கடற்படை தளபதிக்கு எதிராகப் பொய்யான சாட்சியமளிக்க தனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். குருநாகல் நீதிமன்றம், குற்றப் புலனாய்வுத் துறையின் இந்த நடவடிக்கையைச் சட்ட விரோதம் எனக் கண்டித்தது.

அதேபோல், ஊழல் தடுப்பு ஆணையத்தின் புதிய தலைமை நியமனமும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் காத்திருக்கும் நிலையில், அரசியல் எதிரிகளின் வழக்குகள் முன்னுரிமை பெறுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் நிலவுகின்றன.

ஆட்சி மாற்றத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்தது அதிசயங்களல்ல; நேர்மையும் பொறுப்புணர்வும் மட்டுமே. ஆனால் இன்று அதுவே குறைவாகிவிட்டது. அநுர அரசின் வலிமை பொருளாதாரத்தில் அல்ல; அது மக்களின் நம்பிக்கையில் இருந்தது.

அந்த நம்பிக்கை, இன்று மெதுவாக உடைந்து வருகிறது. ஒவ்வொரு இரட்டைச் செயலாலும், ஒவ்வொரு மௌனத்தாலும், மக்களின் நம்பிக்கை இழையிழையாகச் சிதைகிறது.

### குறுக்கு வழி

மாற்றம் என்பது வெற்று முழக்கங்களில் அல்ல, செயல்களில் இருக்க வேண்டும். ஆளும்தரப்பு தன்னுடைய தவறுகளை மறைக்காமல், அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் பதவி நீக்கம், ஊழலை ஒழித்தல், நீதித்துறையின் சுயாதீனம் ஆகியவை மீண்டும் தேசிய முன்னுரிமையாக மாறாவிட்டால், இந்த 'மாற்றம்' மாயையாகவே மாறிவிடும்.

இப்போது ஆளும்தரப்பு ஒரு வழித்தோன்றலில் நிற்கிறது –

தோல்விகளை மறைப்பதா, அதிலிருந்து கற்றுக்கொள்வதா?

இதன் பதிலே மக்கள் நம்பிக்கையின் எதிர்காலத்தையும், இலங்கையின் ஜனநாயகத்தின் உயிரையும் தீர்மானிக்கும்.

# செவ்வந்திக்கு உதவினர் என மேலும் இரு நபர்கள் கைது

பாதாள உலகக் குழுத் தலைவர் சஞ்சீவ குமார சமரரத்ன எனப்படும் கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேகநபரான இஷார செவ்வந்திக்கு உதவினார்கள் எனக் கூறப்படும் மேலும் இரண்டு நபர்களை கொழும்பு குற்றப்பிரிவு (CCD) கைது செய்துள்ளது.

2025 பெப்ரவரி 19 அளுத்கடை நீதிமன்ற வளாகத்தில் நடந்த இந்தக் கொலை தொடர்பாக ஒக்டோபர் 16 மற்றும் 17 ஆகிய நாட்களில் இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் - வெலிபென்ன பகுதியைச் சேர்ந்த 52 வயது பெண் மற்றும் அவரது 31 வயது மைத்துனர் ஆவர். செவ்வந்தி கைது செய்யப்படுவதைத் தவிர்க்க உதவினார்கள் என்று இவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைக்காக தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் தேசிய சபை முதல் தடவையாகக்கூடியது

'தேசிய ஐக்கிய - தேசிய இயக்கம்'; வழிகாட்டுதல் சபை, அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் வெள்ளிக்கிழமை முதன்முறையாக அரசுத் தலைவர் செயலகத்தில்கூடியது.

நாடு தற்போது எதிர்கொள்ளும் ஒரு குறிப்பிடத்தக்க தேசிய நெருக்கடியான போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த சபை நிறுவப்பட்டது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான 'தேசிய ஐக்கிய - தேசிய இயக்கம்' திட்டத்தை முன்மொழிந்து, ஒக்டோபர் 13 அன்று அரசுத் தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது, மேலும் அதை செயல்படுத்துவதை மேற்பார்வையிட ஒரு தேசிய வழிநடத்தல் சபையை நிறுவ முடிவு செய்யப்பட்டது.

சபை அதன் முதல் கூட்டத்தின் போது, போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை அகற்றுதல், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மறுவாழ்வு செய்தல், அச்சுறுத்தலை ஒழிக்க பொதுமக்களின் பங்களிப்பைத் திரட்டுதல், பொது விழிப்புணர்வு பரப்புரைகளில் வெகுஜன அமைப்புகளை ஈடுபடுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசிய ஊடக நடவடிக்கையை செயல்படுத்துதல் ஆகியவற்றில் முதன்மையாகக் கவனம் செலுத்தியது.

இந்தச் சபையை நிறுவுவதன் முதன்மை நோக்கத்தை கோடிட்டுக் காட்டிய அரசுத் தலைவர் அநுரகுமார, போதைப்பொருள் இளைஞர்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க ஆபத்தை விளக்கினார், இது ஒரு கணிசமான சமூக மற்றும் பொருளாதார நெருக்கடியாக வளர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட மதத் தலைவர்கள் இந்த முயற்சியைப் பாராட்டினர், பொது ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும், இந்த நெருக்கடியைச் சமாளிக்க முழு நாட்டையும் ஒன்றிணைக்கும் ஒரு விரிவான தேசிய திட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

# சீனாவிலுள்ள தன்னாட்சி மாநில அதிகாரம் பற்றி பிமல் ஆராய்வு



சீன கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாட்டில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஒக்டோபர் 12 அன்று, குவாங்சி குழுவின் செயலாளர் சென் கேங் மற்றும் பல மாகாண அதிகாரிகளைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

குவாங்சி ஜுவாங் என்பது சீனாவில் உள்ள ஒரு தன்னாட்சிப் பிராந்தியம். குவாங்சி குழு என்பது அந்த மாநிலத்தின் உயர் நிர்வாகக் குழுவாகும். 2024ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் குவாங்சி பிராந்தியக் குழுவின் செயலாளராக சென் கேங் பணியாற்றுகிறார்.

குவாங்சி மாகாணத்தின் தனித்துவமான பண்புகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அதன் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டது.

செயற்கை நுண்ணறிவின் விரைவான உலகளாவிய முன்னேற்றத்தையும் அமைச்சர் ரத்நாயக்க எடுத்துரைத்தார், பேச்சு தொழில் மற்றும் சேவை வழங்கலில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதன் சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்தன, அத்துடன் கிழக்கு ஆசிய பிராந்தியம் முழுவதும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியமான முயற்சிகள் குறித்தும் ஆராயப்பட்டன.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN
LAPTOPS
DIWALI MEGA OFFER
NALIN Information Technologies Pvt Ltd.
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
hp
3 years warranty
Windows 11
ASUS
3 years warranty
Windows 11
M365
MEGA OFFER
msi
DELL
1 years warranty
Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Island wide free delivery
Installment Payment Allowed
BOC
COMMERCIAL BANK
HNB
VISA
MasterCard
Terms & Conditions Apply
hp DELL ASUS Lenovo msi
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.10.2025இல் வெளியிடப்பெற்றது